**Date.10.02.2026.**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் **(**விரைவு நீதிமன்றம் **)**

விழுப்புரம்**.**

**OS.166/2023**

வா**.**சா**. 1**

பெயர்**.** திரு**.**ராஜேந்திரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

வா.சா.ஆ.2 அக்ரிமெண்ட் ஆவணத்தில் இரண்டாவது பக்கத்தில், எங்களது இருவரது கையெழுத்தும் இல்லை என்று சொன்னால் சரிதான். 3 வது பக்கத்தில் 1, 2 என்று காட்டப்பட்டுள்ள இடத்தில் நாங்கள் கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரிதான். அக்ரிமெண்ட் முதல் பக்கத்தில் 2, 3 பக்கங்கள் பற்றி சொல்லப்பட்டுள்ளதா? என்றால் இல்லை. இந்த உடன்படிக்கையை நான் தயார் செய்யவில்லை. இந்த உடன்படிக்கையை பிரதிவாதி தான் எழுதிக் கொண்டு வந்து கையெழுத்து வாங்கினார். என்னை முழுமையாக படிக்க விடவில்லை. படித்துக் கொண்டிருக்கும் போதே பிடுங்கி கையெழுத்து போட்டு விட்டார். அவர் நான் முதல் பக்கம் படித்துக் கொண்டிருக்கும் போதே, நீங்கள் படித்தால் நேரம் ஆகும், நானே படித்து காண்பிக்கிறேன் என்று சொல்லி அந்த அக்ரிமெண்ட்டை பிடுங்கிக்கொண்டார். பிரதிவாதி எனக்கு படித்து காண்பித்தார். அதன் பிறகு தான் நான் கையெழுத்து போட்டேன். அக்ரிமெண்ட் ஆவணத்தில் முதல் பக்கத்தில் என்ன வேலை விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா? என்றால், செல்ப் கட்டி தருகிறேன், டியூப்லைட் போட்டு தருகிறேன், துவைக்கும் கல் போட்டு தருகிறேன், பேன் போட்டு தருகிறேன், என்று பிரதிவாதி சொன்னார். வேறு என்ன உடன்படிக்கையில் போடப்பட்டுள்ளது என்று என்னால் சொல்ல முடியுமா

என்றால், குறிப்பாக கேட்டால் சொல்கிறேன். எனக்கு சரியாக தற்போது ஞாபகம் இல்லை. ஆவணத்தில் முடித்து தருகிறேன் என்று சொல்லியுள்ளாரா? அல்லது முடிக்கப் போகிறேன் என்று சொல்லியுள்ளாரா? என்றால், 3 மாதத்திற்குள் முடித்து தரப்படும் என்று சொன்னார். 3 மாதம் என்பது ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம் என்று சொல்லப்பட்டுள்ளதா? என்றால், நான் காசோலை கொடுத்த தேதியிலிருந்து 3 மாசம் ஆகும். 3 மாதத்திற்குள் முடித்து தர வேண்டும், அதற்கு மேல் காலம் கடத்தக் கூடாது என்று வாய்மொழியாக சொன்னார். எழுத்து பூர்வமாக 3 மாதத்திற்குள் முடித்து தருவதாக சொன்னார். உடன்படிக்கையில் கட்டிடம் முழுவதும் 3 மாதத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு கட்டிட உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ள தே தவிர, உரிமையாளர் என்ற இடத்தில் என் பெயர் போடப்படவில்லை என்றால், சரிதான். அதை நாம் தான் யூகித்துக் கொள்ள வேண்டும். நான்தான் கட்டிடத்தின் உரிமையாளர் ஆவேன். உடன்படிக்கையில் அனைத்து வாசங்களும் கொடுக்கப்படும், ஒப்படைக்கப்படும், தரப்படும் என்றுதான் உள்ளதே தவிர, கொடுக்க வேண்டும், ஒப்படைக்க வேண்டும், கட்டித் தர வேண்டும் என்று இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆவணத்தின் வாசகங்கள் அனைத்தையும் பிரதிவாதி தான் தயார் செய்தார். உடன்படிக்கையை பிரதிவாதி தான் தயார் செய்து வந்தார் என்ற விவரத்தை எனது வழக்குரையில் தெரிவித்துள்ளேனா? என்றால், சொல்லவில்லை. தேவையில்லை என்பதால் அதை விட்டு விட்டேன். எனது வழக்குரையில் பிரதிவாதி எவ்வளவு ரூபாய்க்கு வேலை செய்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால், ரூ.2,00,000/- மதிப்பிற்கான வேலையை தான் தற்போது வரை செய்து உள்ளதாக சொல்லியுள்ளேன். ரூ.2,00,000/- எப்படி கணக்கீடு செய்தேன் என்பதற்கு, ஆதாரம் ஏதாவது கொடுத்துள்ளேனா? என்றால், இல்லை. வழிப்போக்கர் ஒருவரிடம் சொன்னேன். அவர் தன்னை கட்டுமானம் செய்பவர் என்று சொல்லிக் கொண்டார். அவர்தான் பிரதிவாதி ரூ.2,00,000/- மட்டுமே வேலை செய்திருப்பார் என்று எனக்கு சொன்னார். அவர் பெயரை சொல்ல முடியுமா? என்றால், எனக்கு தெரியவில்லை. அவர் ஒரு வழிப்போக்கர் மட்டும்தான்.

<u>குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.</u>